[1974 சனவரி 23

மானியம் பெறும் கல்லூரிக் கணக்குகள் தணிக்கை

*93 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள உதவி பெறும் கல்லூரிகளின் கணக்குகளை அரசே தணிக்கை செய்ய உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள மானியம் பெறும் கல்லூரிகளின் கணக்குகளை 1972-73-ம் நிதி ஆண்டிலிருந்து தணிக்கை செய்வதற்காக கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் ஒரு தணிக்கை பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 10.00)

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தனியார் கல்லூரி நிர்வாகத்தினர் ஆட்சேபனைக் குறிப்பு ஏதேனும் அரசுக்கு அனுப்பி இருக்கிறார்களா ? அரசு என்ன பதில் அனுப்பி இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியார் கல்லூரியைச் சேர்ந்த நிர்வாகிகள் அப்படிப்பட்ட முறை வேண்டாமென்றும் ஏற்கனவே இருந்து வருகிற முறையே வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். ஆயினும் இப்படி ஒரு தணிக்கைப் பிரிவைக் கல்லூரி கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் ஏற்படுத்துவதன் மூலம் தெளிவாகத் தணிக்கை செய்ய இயலும் என்ற காரணத்தால் அரசு இந்த முறையை மாற்றுவதாக இல்லை. ஆயினும் கல்லூரி நிர்வாகத்தினர் தனிப்பட்ட தணிக்கையாளர்களை வைத்து தங்கள் கணக்குகளைத் தணிக்கை செய்வது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கிற தொகையைக் கணக்கில் சேர்த்து கொள்ள இயலாது என்று தெரிவித்திருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். அரசாங்கத்தின் சட்ட திட்டங்களைத் தெளிவாகத் தெரிந்தவர்கள் மூலம் தணிக்கை செய்வது மூலமாக நல்ல நிலை ஏற்படும் என்ற நோக்கத்தோடு இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

1974 சனவரி 23]

திரு. ஏ. சுப்பிரமணியம்: இம்மாதிரித் தணிக்கை செய்பவர்கள் தவறுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்களா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொதுப்படையாகச் சொல்லுவதற்கில்லை. ஒவ்வொரு கல்லூரியைப் பொறுத்தும் தணிக்கையாளர்கள் தணிக்கை செய்து அதுபற்றிய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். குற்றங்கள், குறைகள் இருக்குமானால் நிவர்த்திக்க வேண்டுமென்று அந்தந்தக் கல்லூரித் துறையினர் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஸ்பெஷல் பீஸ் என்றும், டொனேஷன் என்றும் தனியார் கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் வசூலிக்கிறார்கள். இதை முறைப்படுத்த தணிக்கை அதிகாரிகள் என்ன வழிவகைகளைச் செய்கிறார்கள், இன்ஸ்பெக்ஷன் இருக்கிறதா? அது சம்பந்தமான விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கனவே இவற்றைப் பரிசீலித்து மாறுதல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. டியூஷன் ஃபீஸ், நன்கொடையாக வருகிற தொகை எல்லாம் கணக்கில் வர வேண்டுமென்றும் மொத்தச் செலவில் வரவினத்தை கழித்த பிறகு டெபிசிட் ஏற்படுமானால் அதிலே 80 சதவிகிதத்திற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்ளும்.

ஓசூரில் புதிய கல்லூரி

* 94 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூரில் ராஜாஜி நினைவுக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அப்பகுதி மக்களிடமிருந்து 1973 ஆகஸ்டில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையின் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS